மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்களைப் பேச அனுமதித்தால் திரு. சுப்பு அவர்களும் கேட்பார்கள் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் திரு. உமாநாத் அவர்களை உட்காரச் சொன்னேன். அவர்கள் உட்கார்ந்து விட்டார்கள். அவர்களே உட்கார்ந்து விட்டபோது நீங்கள் ஏன் இன்னும் வற்புறுத்திக் கொண்டே இருக்கிறீர்கள், என்னிடம் வைராக்கியமாக இருக்க வேண்டும் என்று நினைத்துத்தான் இப்படி வற்புறுத்துகிறீர்களா ?

திரு. க. சுப்பு : இது முக்கியமான பிரச்னை, அதில் ஒன்றிரண்டு விஷயங்களைக்கூடக் கேட்பதற்கு உரிமையில்லை என்றால் என்ன செய்வது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு அவை முன்னவர்கள் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்பதால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(5) அறிவிப்பு.

நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகள் நீக்கம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கு மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் பயன்படுத்திய சில வார்த்தைகளைப் பொறுத்து பிரச்னையைக் கிளப்பினார்கள். இது சம்பந்தப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளை பார்த்தேன். அவற்றில்...... * * * என்று மொத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பகுதியை மட்டும் நீக்கிவிட வேண்டும் என்று உத்திரவிடுகின்றேன்.

(6) தகவல் கோரல்.

அறிவிப்புக் கொடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, விதி 42-ன் கீழ் மிக முக்கியமான தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருந்தேன். காரைக்குடியில் நடைபெற்ற சம்பவம். இது சாதாரணமான காரியம் என்று சொல்லிவிட முடியாது. இதை இன்றைக்கு எடுத்துக்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

கொள்ளவில்லையென்றாலும் உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விஷயம். ஆகவே, இது என்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலையில் கூட இது பற்றி தொடர்பு கொண்டேன். சில விவரங்கள் இன்னும் வரவேண்டியிருக்கிறது என்று தெரிய வந்தது. இன்றைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் இருந்தேன். விவரங்கள் இன்னும் சரியாகக் கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டதால், நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன். இதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : 41-வது விதியின் கீழ் கல்லூரி ஆசிரியர்கள் சம்பந்தமாக நான் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருந்தேன்......அது இதில் சேர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை.... எனக்கு ஏற்படுகின்ற சந்தேகம்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சந்தேகத்தை எல்லாம் இங்கே கேட்டுக் கொண்டு இருக்கக் கூடாது. நீங்கள் கொடுத்தது இன்னும் ஆய்வில் இருக்கிறது. மறுக்கப்பட்டுவிட்டது என்று உங்களுக்கு இதுவரையிலும் தகவல் எதுவும் வரவில்லையென்றால் அது இன்னும் ஆய்வில் இருக்கிறது என்றுதான் பொருள். அது பற்றி பின்னால் அறிவிக்கப்படும்.

[முற்பகல் 11-00]

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் என்னால் கொடுக்கப்பட்டதும், இதே சம்பந்தப்பட்ட விஷயம்தான். இதற்கு அனுமதி அளித்து விவாதத்திற்கு வந்து விட்டால், அதற்கு அனுமதி இல்லாமல் போய்விடும். ஆகவே தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதே விஷயமாக இருந்தால் தயவு செய்து சொல்லுங்கள். அதையும் இதோடு இணைக்கத் தயார்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : விதி 41-ன் கீழ் நானும், திரு அழகர்சாமி அவர்களும் இரண்டு பேரும் சேர்ந்து கையெழுத்திட்டு, இந்தத் தனியார் ஆசிரியர்கள் போராட்டத்தைப் பற்றி ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்களும் திரு. அழகர்சாமி அவர்களும் கொடுத்திருப்பது பரிட்சையைப் புறக்கணிப்பது பற்றிய பிரச்னை. இங்கே கொடுக்கப்பட்டிருப்பது அவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள் என்பது. எனவே, நீங்கள் கொடுத்தது வேறு, இந்தப் பிரச்னை வேறு. எனவே, அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. க. சுப்பு ; ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டதனால் தான், இந்த பகிஷ்கரிப்பே வந்தது. அதனால், அது வேறு, இது வேறு என்று சொல்வதற்கு இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் நான் ஏற்கனவே இதே பிரச்னையைப் பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால், அதே நேரத்திலே மற்றவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எனக்கு ஏன் அனுமதி கொடுக்கப்படவில்லை என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்குமானால், அதுபற்றி என் அறையிலே கலந்து பேசலாம். அதை வைத்துக் கொண்டு இங்கே பேசுவதற்கு இப்போது நேரமில்லை.

7 கவன ஈர்ப்பு.

அரசுக் கலைக் கல்லூரி தற்காலிக ஆசிரியர்கள் வெளியேற்றப் பட்டதும், அவர்கள் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதத் தினால் ஏற்பட்டுள்ள நிலையும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஆர். உமா நாத், ஆர். கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், பொ. விஜயராகவன் ஆகியோர் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி யினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் ;

'' தமிழக அரசினர் கலைக் கல்லூரிகளில் ஐந்தாண்டு முதல் ஏழாண்டு வரை பணியாற்றிய தற்காலிக ஆசிரியர்கள் வெளி யேற்றப்பட்டதையும், மேலும் வெளியேற்றப் பெற இருப்பதை யும் எதிர்த்து அனைவரையும் நிரந்தரமாக்கக் கோரி, மேற்படி ஆசிரியர்கள் மாநிலக் கல்லூரி முன் 20—2—1978ஆம் தேதி யன்று மேற்கொண்டுள்ள உண்ணாவிரதத்தையொட்டி எழுந்துள்ள நிலைமை குறித்து.''

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்கள்/பயிற்றுநர்கள்/விரிவுரையாளர்கள் (Assistant Professors/Tutors/Demonstrators) பதவிக்கு தமிழ்நாடு தேர்வுக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனால்